Register Number | | | | | | |

# தமிழ் — இரண்டாம் தாள்

காலம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
ii) முகவுரை, பொருளுரை, முடிவுரை என்ற அமைப்பில் கட்டுரை அமைதல் வேண்டும்.

I. பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றி இரு பக்கங்களில் கட்டுரை வரைக. 1×10=10

1. குருவிப்பட்டி பாலமும், பொன்னம்பலமும்
2. வேலை (வேளை) வந்துவிட்டது. – இக்கதைத் தலைப்பின் பொருத்தத்தை விளக்குக.
3. பசுவின் செயலும், கதையுணர்த்தும் நீதியும்.

II. பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக. 1 × 10 = 10

(*குறிப்பு* : கடிதத்தில் கையொப்பமிடும் இடத்தில் 'X' என்று குறிப்பிடவும். பெயரோ, பதிவு எண்ணோ அல்லது முகவரியோ எழுதினால் விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.)

4. எழுத்தர் பணி வேண்டி தனியார் நிறுவன மேலாளருக்கு ஒரு கடிதம் எழுதுக.
5. போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்குப் பேருந்துகள் நிறுத்தாமல் செல்லும் போக்கைக் குறித்து ஒரு புகார் கடிதம் எழுதுக.
6. பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா குறித்து நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

III. 7. கீழ்வரும் பாடலைப் படித்து பின்வரும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. $5 \times 2 = 10$

கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி யுண்டாம்;
கொடுங்கோபம் பேரதிர்ச்சி; சிறிய கோபம்
ஆபத்தா மதிர்ச்சியிலே சிறியதாகும்.
அச்சத்தால் நாடியெலா மவிந்து போகும்;
தாபத்தால் நாடியெலாம் சிதைந்து போகும்;
கவலையினால் நாடியெலாந் தழலாய் வேகும்;
கோபத்தை வென்றிடலே பிறவற்றைத்தான்
கொல்வதற்கு வழியென நான் குறித்திட்டேனே.

*வினாக்கள் :*

i) கோபத்தால் நிகழ்வது எது ?
ii) அச்சத்தால் நிகழ்வது எது ?
iii) பேரதிர்ச்சியைத் தவிர்க்கச் செய்ய வேண்டுவது யாது ?
iv) கவலையினால் நிகழ்வது எது ?
v) இப்பாடலுக்குத் தகுந்த தலைப்பு தருக.

Turn over

IV. 8. கீழ்க்காணும் உரைநடையை *மூன்றில் ஒரு பங்காகச்* சுருக்கி எழுதுக : $1 \times 10 = 10$

தாய்த்திரு நாட்டுக்கும் தாய்மொழியாகிய தமிழ்மொழிக்கும் தலைசிறந்த தொண்டாற்றிப் பூதவுடலை நீத்துப் புகழுடம்பு எய்திய திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை தூங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்களிடையில் ஒரு புத்தம்புதிய உணர்ச்சியை, நாட்டுப்பற்றை, சுத்தத் தேசியத்தை, அன்னியத்துணி விலக்கை, ஒற்றுமையை உண்டாக்கிய தலைவர்களுள் தலை சிறந்தவர்.

சிதம்பரனார் ஒரு வழக்கறிஞர்; வீர வாழ்க்கை நடாத்திய வீரர்; சிறந்த தமிழ்ப்புலவர், பேச்சில் பெருநாவலர்; முதன் முதலில் கப்பல் ஓட்டிய உத்தமர்; சாதி சமயங்கடந்த தேச பக்தர்; செய்ந்நன்றி மறவாச் செம்மல்.

V. 9. அன்பின் ஐந்திணைகள் யாவை ? $1 \times 2 = 2$

*அல்லது*

மாலைக்குரிய சிறுபொழுது, பெரும்பொழுதுகளை எழுதுக.

10. பாடாண் திணையை விளக்குக. $1 \times 2 = 2$

*அல்லது*

பொதுவியல் திணையை விளக்கு.

11. வெண்பாவின் பொது இலக்கணம் யாது ? $1 \times 2 = 2$

*அல்லது*

ஆசிரியப்பா எத்தனை வகைப்படும் ?

12. கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக : $1 \times 2 = 2$

கழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை

இகழ்வாரை நோவ தெவன்.

13. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் இரண்டனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக : $2 \times 2 = 4$

i) கண்ட ii) தோன்றுக

iii) அளித்தல் iv) கடாவினார்.

14. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக: $2 \times 2 = 4$

i) அரும்பொருள் ii) ஒன்றாப் புகழ்

iii) கடினமுரீஇ iv) நிகழ்மாற்றம்.

15. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குப்** புணர்ச்சி இலக்கணம் தருக: $2 \times 2 = 4$

i) பூஞ்சோலை ii) மரக்கால்

iii) வயிற்றுவலி iv) பாசடை.

16. கீழ்க்காணும் இரு வினைமுற்றுகளில் ஏதேனும் **ஒன்றனுக்கு** தொழிற்பெயர் எழுதுக : $1 \times 2 = 2$

i) உண்டான் ii) வீழ்ந்தார்.

17. தற்குறிப்பேற்றணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. $1 \times 4 = 4$

*அல்லது*

உள்ள முடைமை உடைமை பொருளுடைமை

நில்லாது நீங்கி விடும்.

- இக்குறட்பாவில் பயின்றுள்ள அணியைச் சுட்டி விளக்குக.

18. பொது மொழியை விளக்குக. $1 \times 2 = 2$

*அல்லது*

பெயரெச்சம் என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ?

19. இரட்டைக்கிளவியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. $1 \times 2 = 2$

*அல்லது*

ஐய வினா என்றால் என்ன ?

VI. 20. கீழ்க்காணும் உரைநடையைப் படித்துத் தகுந்த நிறுத்தற் குறியிடுக : $1 \times 2 = 2$

நீ போட்டியில் வெற்றி பெற வேண்டுமானால் தினமும் பயிற்சியில் ஈடுபடு என்று பயிற்சியாளர் கூறினார்

21. கீழ்க்காணும் சொற்களில் **இரண்டனுக்கு** திருந்திய சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) அஞ்சு ii) அடமழை

iii) தங்கச்சி iv) பேரன்.

[ Turn over

22. கீழ்க்காணும் சொற்களில் **இரண்டினைப்** பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

i) மாசணுகா ii) அரவணை

iii) விடியளவும் iv) உயிரோவியமே.

23. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள எழுத்துப்பிழைகளைத் திருத்தி எழுதுக : $3 \times 2 = 6$

i) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

ii) ஒப்புறவு ஒலுகு

iii) மன்னன் உயிர்த்தே மளர்தலை உளகம்.

24. கீழ்க்காணும் வேற்றுமொழிச் சொற்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) வாத்தியார் ii) பஸ்.

25. கீழ்க்காணும் தொடரைச் செய்தி வாக்கியமாக மாற்றுக : $1 \times 2 = 2$

கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடுமன்றோ ?

26. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்குக : $1 \times 2 = 2$

வேட்டைக்கு போனவன் கோட்டையை பிடித்தான்.

27. கீழ்க்காணும் தொடரை வினாத்தொடராக மாற்றுக : $1 \times 2 = 2$

இளஞ்செழியன் வாளினைக் கையில் ஏந்தினான்.

VII. 28. கீழ்க்காணும் ஆங்கிலத் தொடர்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்க : $1 \times 4 = 4$

**Libraries serve as a means of spreading education among people. There are two kinds of libraries – school libraries and public libraries. Students must make good use of the libraries and widen their knowledge. Public libraries are open to all. Any one can go there and read whatever book he likes to read.**

29. கீழ்க்காணும் மரபுத்தொடர்கள் அல்லது பழமொழிகளில் எவையேனும் **மூன்றனைத்** தமிழில் மொழிபெயர்க்க : $3 \times 2 = 6$

i) No thunder without lightning.

ii) Time once lost is lost forever.

iii) Where there is will there is a way.

iv) Drops of water make an ocean.

v) Union is strength.